தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
*******

ஆணை எண் 86/ந/2022
நாள். 11.08.2022

திருமதி. L.சுந்தரி,
பல்லாவரம், சென்னை. – முறையீட்டு மனுதாரர்.

ஆணையாளர்,
மறைமலைநகர் நகராட்சி. – எதிர் மனுதாரர்

சென்னை மாவட்டம், பல்லாவரம், பாத்திமா மஞ்சில் தெரு, கதவு எண்.4, என்ற முகவரியில் வசிக்கும் திருமதி. L.சுந்தரி என்பவரின் 28.06.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 30.06.2022 அன்று பெறப்பட்டு 086/ந/2022 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

சென்னை மாவட்டம், பல்லாவரம், பாத்திமா மஞ்சில் தெரு, கதவு எண்.4, என்ற முகவரியில் வசிக்கும் திருமதி. L.சுந்தரி என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது புகார் மனுவில் கீழ்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:–

"We have a house situated in No.16, Bharathiyar Street, Potheri, Chengalpet Taluk, coming under the municipal jurisdiction of 'Maraimalai Nagar Muncipality'. The house belonged to my mother L. Thamayandhi and after her demise in 2010, it has been inherited by us as her legal heirs.

To the right side of our house bearing a Door No.17, a person named Prabhu, has been constructing a 3-storey building for an extent of around 12,000 sq.ft. without a proper building permission and plan approval. It is learned that the building is a commercial building meant for ladies hostel of around 150 bed capacity. The land is actually a Grama Natham land allotted by the Government of Tamil Nadu under free patta scheme for the residence of poor, which is not eligible for construction of 3-storey commercial building. Further, construction is also being carried out without adhering to the norms prescribed for construction by the authorities of the local bodies. There is no adequate provision made for drainage

and sewage for occupancy capacity of around 150. This would definitely pose a problem for other residents of that area if the drainages were let out in the canal meant for rainwater drain.

The person, apart from constructing an illegal construction, also creates problem and disturbance by unauthorisedly occupying our land for erection of drainage pipes and other small protrusions like window openings, electrical pipes, and water connection pipes. Complaints regarding this unauthorized construction and nuisance created by the owner of the building was made to the municipality on 14.12.2020 and 12.5.2022. Besides these written complaints, several oral complaints were also made. However, no action has been taken so far.

Hence, I request you to kindly intervene into the matter and help us in getting the drainage pipes removed from our site, and nuisance created to the other residents of that area by taking a proper remedial action" என தெரிவித்துள்ளார்.

(2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 04.07.2022 நாளிட்ட கடிதம் மூலம் மறைமலைநகர் நகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

மறைமலைநகர் நகராட்சி ஆணையாளர் தனது 20.07.2022 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

"தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்க்கு கீழ்வருமாறு அறிக்கை பணிவுடன் சமர்ப்பிக்கின்றேன்.

திரு. R. பிரபு என்பவர் மறைமலைநகர் நகராட்சி, பொத்தேரி கிராமத்தில் புல எண்.221/103, என்கிற இடத்தில் கட்டப்பட்டு வரும் கட்டிடத்திற்கு மறைமலைநகர் நகராட்சியின் அனுமதி உத்திரவு கோரி தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம் 1971 பிரிவு 56, 57 மற்றும் 85–ன் கீழ் 10.06.2022–ல் அறிவிப்பு அனுப்பப்பட்டது. கட்டுமான பணி நடைபெறும் இடத்தினை நேராய்வு செய்த போது கட்டிடம் அனுமதி இல்லை என விசாரணையில் தெரியவந்ததை தொடர்ந்து, மறைமலைநகர் நகராட்சி அலுவலகம் மூலம் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவுகள் 216 (1) (2)–ன்கீழ் அறிவிப்பு 07.07.2022–ல் வழங்கப்பட்டு, மேற்படி அறிவிப்பு 08.07.2022–ல் பெற்றுள்ளார். ஆனால் இதுநாள் வரை கட்டிட அனுமதி பெறுவதற்கான வரைபடம் எதுவும் இணையதளத்தில் (online) திரு. R. பிரபு என்பவரால் சமர்ப்பிக்கப்படவில்லை. எனவே திரு. R. பிரபு என்பவருக்கு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவுகள் 216 (3)–ன் கீழ் ஊர்ஜித உத்திரவு (Confirmations orders) 18.07.2022–ல் பதிவு அஞ்சல் மூலம் அறிவிப்பு அனுப்பப்பட்டு, தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்ற விவரம் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

(3) மனுதாரரும் மற்றும் மறைமலைநகர் நகராட்சி ஆணையரும் 02.08.2022 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 04.07.2022 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

(4) மனுதாரர் திருமதி.L.சுந்தரி, 02.08.2022 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி பின்வரும் தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

“எனக்கு சொந்தமான **வீடோடு அடங்கிய** இடம் செங்கல்பட்டு மாவட்டம், பொத்தேரி, பாரதியார் சாலை எண் **16ல் உள்ளது.** எனது வீட்டிற்கு பக்கத்தில் திரு. பிரபு என்பவர் முறையான கட்டட அனுமதியின்றி 3 மாடி கட்டடம் கட்டியுள்ளார். மேற்கண்ட திரு பிரபு என்பவர் மேற்கண்ட மாடிக் கட்டடத்தை கட்டும்போது எங்களது இடத்தில் போர் மற்றும் கழிவு நீர் குழாய்களை அமைத்துள்ளார். மேலும் அக்குழாயிலிருந்து கழிவு நீர் கசிவு ஏற்பட்டால், எங்களது இடத்தில் தேங்கிட வாய்ப்பு இருப்பதால், அதனைத் தடுக்கும்பொருட்டு எங்களது இடத்தில் காம்பவுண்ட் சுவர் போடப்பட்டது. அதனையும் அவர்கள் உடைத்துவிட்டனர். இது தொடர்பாக 2020–லிருந்து மறைமலை நகராட்சியில் புகார்கள் அளித்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

எனவே, மேற்கண்ட அனுமதி இல்லாமல் கட்டப்பட்ட கட்டடத்தின் உரிமையாளர் மீது சட்டபூர்வமான நடவடிக்கை எடுத்திடவும், மேலும் எங்களது இடத்தில் அமைந்துள்ள மேற்கண்ட மாடி வீட்டின் கழிவு நீர் குழாயையும், போர் குழாயையும் அகற்றிடவும் தேவையான நடவடிக்கை எடுத்திடும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்” என தெரிவித்துள்ளார்.

(5) எதிர்மனுதாரான மறைமலைநகர் நகராட்சி ஆணையாளர் மற்றும் நகரமைப்பு அலுவலர் ஆகியோர் 02.08.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்கண்டவாறு வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

“மறைமலை நகராட்சியில் சா. லட்சுமி ஆகிய நான் கடந்த 8 மாதங்களாகவும், நகரமைப்பு அலுவலரான ந. தாமோதரன் ஆகிய நான் கடந்த 11/2 வருட காலமாகவும் பணியாற்றி வருகிறோம். மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டவாறு மறைமலைநகர் நகராட்சி, பொத்தேரி கிராமம் புல எண் 221/103 என்கிற இடத்தில் ஆர். பிரபு என்பவரால் அனுமதியில்லாமல் 2020 முதல் கட்டப்படும் கட்டடத்திற்கான அனுமதி உத்தரவு கோரி தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம் 1971 பிரிவுகளின் கீழ் 10.06.2022ல் அறிவிப்பு அனுப்பப்பட்டது. அதே போன்று 7.7.2022 அன்றும் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 216 (1) (2)ன் கீழ் மற்றொரு அறிவிப்பும் கட்டட உரிமையாளருக்கு வழங்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து மேற்கண்ட சட்டம் பிரிவு 216(3)ன் கீழ் ஊர்ஜித உத்தரவு (confirmation order) 18.7.2022 அன்று அனுப்பப்பட்டுள்ளது. இதனை தொடர்ந்து Charge sheet தாக்கல் செய்து, கட்டட உரிமையாளருக்கு summon அனுப்பப்படும் என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம்.

இந்நேர்வு தொடர்பாக வழங்கப்பட்ட அறிவிப்புகளின் நகல்களை இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்கிறோம்” என தெரிவித்துள்ளனர்.

(6) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், மறைமலைநகர் நகராட்சி ஆணையரின் விளக்க அறிக்கை, வாக்குமூலம் மற்றும் நகரமைப்பு அலுவலரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

- மனுதாரர் தனது மனுவில் புகாராக தெரிவித்தபடி, செங்கல்பட்டு மாவட்டம், மறைமலைநகர் நகராட்சி, பொத்தேரி கிராமம், புல எண்.221/103 என்கிற இடத்தில் திரு.பிரபு என்பவரால் தமிழ்நாடு நகர் ஊரமைப்பின் திட்ட அனுமதியின்றியும் மற்றும் மறைமலைநகர் நகராட்சியின் கட்டிட அனுமதியின்றியும் சட்டத்திற்கு முரணாக கட்டடம் கட்டியுள்ளதை ஆணையரின் அறிக்கை மற்றும் வாக்குமூலம் வாயிலாக உறுதியாகிறது.

- மனுதாரர் டிசம்பர் 2020 ஆம் ஆண்டிலேயே மறைமலைநகர் நகராட்சிக்கு புகாராக தெரிவித்தும், நகராட்சி நிர்வாகத்தினர் குறிப்பாக நகராட்சியில் கடந்த 1 ½ ஆண்டுகளாக நகரமைப்பு அலுவலராக பணியாற்றும் திரு.ந.தாமோதரன் என்பவர் இப்புகார் குறித்து பரிசீலித்து, நகராட்சியின் நகரமைப்பு ஆய்வாளர் மூலம் கள ஆய்வினை ஆரம்பத்திலேயே மேற்கொண்டிருந்தால், கட்டட உரிமையாளரால் தற்போது விதிமீறி 3 மாடி வரை கட்டடம் கட்டப்பட்டிருக்க முடியாது.

- அவ்வாறின்றி, இம்முறைமன்ற நடுவ விசாரணையில், நகரமைப்பு அலுவலர், கள ஆய்வுப்பணியினை மேற்கொள்வது குறித்து தனது பணியல்ல எனவும், அது நகரமைப்பு ஆய்வாளரின் பணி என நகரமைப்பு அலுவலர் தனது பொறுப்பினை தட்டி கழிப்பது ஏற்கத்தக்கதல்ல. இதனை இம்முறைமன்ற நடுவம் மிக வன்மையாக கண்டிக்கிறது.

- மேலும், மனுதாரால் டிசம்பர் 2020 ஆம் ஆண்டில், நகராட்சியில் புகாராக அளித்தும் அதுகுறித்து எவ்வித துரித நடவடிக்கையும் மேற்கொள்ளாத நகராட்சி நிர்வாகத்தினர், மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்த புகார் மனுவினை விசாரிக்கும் தருணத்தில், மனுதாரரால் திட்ட அனுமதி வரைபடம் சமர்ப்பிக்கப்படவில்லை என்பதால் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் கீழ் கட்டட இடிப்பு தொடர்பான 07.07.2022 மற்றும் 18.07.2022 நாளிட்ட அறிவிப்புகளும் அவசர அவசரமாக கட்டட உரிமையாளருக்கு அனுப்பப்பட்ட விவரம் ஆவணங்களின் மூலம் அறியமுடிகிறது.

- நகராட்சியில் புகார் மனு டிசம்பர் 2020ல் பெறப்பட்டதும், உடனுக்குடன் அனுமதியின்றி கட்டப்பட்டு வரும் கட்டடம் குறித்து ஆரம்ப கட்டத்திலேயே கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாத காரணத்தினால் இவ்வாறு முறைகேடான கட்டடங்கள் கட்டுவதற்கு வழிவகுத்து ஒரு முன்னுதாரணமாக அமைய நேரிடுகிறது. நகரமைப்பு ஆய்வாளர் மற்றும் நகரமைப்பு அலுவலர் ஆகியோர் ஆய்வினை மேற்கொண்டிருந்தால் இதனை தவிர்த்திருக்கலாம். மேற்கண்ட 3 மாடி கட்டடம் கட்டும் வரை உரிய காலத்தில் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளாத பொறுப்பற்ற முறையில், கடமை தவறி பணியாற்றிய மறைமலைநகர் நகராட்சியின் நகரமைப்பு அலுவலர், நகராட்சியின் நகரமைப்பு ஆய்வாளர் மற்றும் சம்பந்தப்பட்ட களப்பணியாளர்கள் மீதும் துறைரீதியிலான ஒழுங்கு நடவடிக்கையினை எடுக்க நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

- கடந்த 8 மாதங்களாக பணியாற்றி வரும் நகராட்சி ஆணையாளர், முறையாக மறைமலைநகர் நகராட்சிக்குட்பட்ட "விதி மீறல் கட்டடங்கள்" குறித்தான நேர்வுகள் தொடர்பாக தொடர்ச்சியாக நகராட்சியில் அலுவலர்களிடையே ஆய்வுக் கூட்டங்கள் நடத்தி பரிசீலிக்கப்பட்டிருந்தால், இத்தகைய விதிமீறல் கட்டடம் உருவாகி இருக்காது. நகராட்சியில் பெறப்படும் புகார் மனுக்களை உரிய காலத்தில் விரைவில் பரிசீலிக்காமல், மெத்தனமாக பணியாற்றிய மறைமலைநகர் நகராட்சி ஆணையாளரின் செயலினை இம்முறைமன்றம் கடுமையாக கண்டிக்கிறது.

- மேலும் இந்நேர்வில் அனுமதியற்ற கட்டடம் தொடர்பான தொடர் நடவடிக்கையினை காலம் தாழ்த்தாமல் உடனுக்குடன் மேற்கொள்ளப்படவேண்டும் எனவும் நகராட்சி ஆணையருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

- எதிர்காலத்தில் இதுபோன்ற நிகழ்வுகள் ஏற்படாவண்ணம் பொதுமக்களிடமிருந்து பெறப்படும் புகார் மனுக்களை விரைவாக பரிசீலினை செய்து உரிய நடவடிக்கையினை மேற்கொள்ளப்பட வேண்டும் என மறைமலைநகர் நகராட்சி ஆணையருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

- மனுதாரரின் இடத்தில் கட்டட உரிமையாளரால் போடப்பட்ட கழிவுநீர் குழாய் மற்றும் போர்குழாய் ஆகியவற்றினை அகற்றிடவேண்டி மனுதாரர் கோருவது தனி நபர்களின் பொருட்பாடானது என்பதால் இதனை இம்முறைமன்ற நடுவத்தால் பரிசீலிக்க இயலாது என மனுதாரருக்கு தெரிவிக்கப்படுகிறது.

2022 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 11–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திருமதி.L.சுந்தரி,
கதவு எண்.4, பாத்திமா மஞ்சில் தெரு,
பல்லாவரம், சென்னை – 43.

2) ஆணையாளர், மறைமலைநகர் நகராட்சி,
செங்கல்பட்டு மாவட்டம்.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், நெ.75, சாந்தோம் மெயின் ரோடு,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், நெ.75, சாந்தோம் மெயின் ரோடு,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

16-8-22

செயலாளர்

12/08/22